தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலூகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060 9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

Vol: 03	Issue: 231	4 Pages	29.06.2026	Monday	Price Rs. 6	Annual Subscription Rs: 1825
மலர்: 03	இதழ்: 231	4 பக்கங்கள்	29.06.2026	திங்கட்கிழமை	விலை ரூ.6	வருட சந்தா ரூ.1825

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்த தில்

விளக்கம்:
தக்க பெரியாரின் கூட்டத்தில் உள்ளனவாய் நடக்கவல்ல ஒருவனுக்கு,அவனுடைய பகைவர் செய்யக்கூடியத் தீங்கு ஒன்றும் இல்லை.

ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

ஜப்பானில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் மக்கள் அச்சமடைந்தனர்.

ஜப்பான் நாட்டின் இவாடி மாகாணத்தில் இன்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அம்மாகாணத்தில் 40 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 7.25 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவானது.

இந்த நிலநடுக்கதால் கட்டிடங்கள் குலுங்கியதால் மக்கள் அச்சமடைந்து வீதிகளில் தஞ்சமடைந்தனர். நிலநடுக்கத்தால் உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டதா? என்ற தகவல் இதுவரை வெளியாகவில்லை. அதேவேளை, சுனாமி எச்சரிக்கை எதுவும் விடுக்கப்படவில்லை.

இஸ்ரேல் லெபனான் சண்டை நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஹிஸ்புல்லா

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து கடந்த பிப்ரவரி 28ம் தேதி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலை தொடர்ந்து இஸ்ரேல், அரபு நாடுகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியது. இந்த மோதலால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. இந்த மோதலில் ஈரானுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர் இஸ்ரேல் மீது தாக்குதலை தொடங்கினர்.

இதனால், இஸ்ரேல் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர் இடையே மோதல் ஏற்பட்டது. லெபனானில் செயல்பட்டு வரும் ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினர், ஹிஸ்புல்லாவின் ஆயுதக்கிடங்குகள், கட்டுப்பாட்டு மையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹிஸ்புல்லா ஆயுதக்குழுவினரும் இஸ்ரேல் மீது அவ்வப்போது டிரோன்கள், ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துவதை நிறுத்த வேண்டுமென அந்நாட்டு அதிபர் ஜோசப் அரோன் வேண்டுகோள் விடுத்தார். மேலும், அமெரிக்காவில் இஸ்ரேல் லெபனான் இடையே நடந்த பேச்சுவார்த்தையில் இரு தரப்பு சண்டை நிறுத்தத்தை அமல்படுத்த ஒப்புக்கொண்டன. ஒப்பந்தப்படி ஹிஸ்புல்லா ஆயுதக்குழு இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்தி ஆயுதங்களை கைவிட வேண்டும். ஹிஸ்புல்லா ஆயுதங்களை கைவிட்டு தாக்குதலை நிறுத்தியவுடன் லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறும் என்று ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல், லெபனான் இடையேயான ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா ஆயுதக்குழு ஏற்க மறுத்துள்ளது. இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வோம் என்று ஹிஸ்புல்லா ஆயுதக்குழு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் பாதுகாப்புப்படையினர் மோதல்; 10 பேர் பலி

லாகூர், ஜூன் 29

பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் , பாதுகாப்புப் படையினர் இடையே நடந்த மோதலில் 10 பேர் உயிரிழந்தனர்.

பாகிஸ்தான் நாட்டின் சிந்து மாகாணம் கராச்சி நகரின் குலிஸ்தன் ஜஹர் பகுதியில் துணை ராணுவத்தின் தலைமை அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்தை குறி வைத்து பயங்கரவாதிகள் நேற்று இரவு தாக்குதல் நடத்தினர்.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட வாகனத்தை துணை ராணுவ அலுவலகத்தின் நுழைவு வாயிலில் மோதி பயங்கரவாதிகள் வெடிக்கச்செய்தனர்.

இதையடுத்து, பாதுகாப்புப்படையினரை நோக்கி பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர். இதற்கு பாதுகாப்புப்படையினரும் பதிலடி கொடுத்தனர். இருதரப்பிற்கும் இடையே சில மணிநேரம் துப்பாக்கி சூடு நடைபெற்றது.

இந்த மோதலில் 6 பயங்கரவாதிகள், 4 பாதுகாப்புப்படையினர் என மொத்தம் 10 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலுக்கு தெஹ்ரி இ தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இங்கிலாந்தில் அதிர்ச்சி: இந்திய மாணவர் மர்ம மரணம்

லண்டன், ஜூன் 29

இங்கிலாந்தில் இந்திய மாணவன் மர்மமான முறையில் மரணமடைந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் கமாரெட்டி மாவட்டம் தலமட்லா கிராமத்தை சேர்ந்த இளைஞர் ஸ்ரீநாத் (வயது 25). இவர் இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வந்தார். கடந்த ஓராண்டுக்குமுன் லண்டன் சென்ற ஸ்ரீநாத் அங்கு விடுதியில் தங்கி கல்வி பயின்று வந்தார்.

மர்ம மரணம்

இந்நிலையில், விடுதியில் தங்கி இருந்த ஸ்ரீநாத் கடந்த 22ம் தேதி இரவு மர்மமான முறையில் மரணமடைந்தார். பிறந்தநாள் விழா ஒன்றில் பங்கேற்ற ஸ்ரீநாத் அன்று இரவு விடுதியில் உள்ள தனது அறையில் சடலமாக கிடந்துள்ளார். இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதேவேளை, ஸ்ரீநாத்தின் உடலை இந்தியாவுக்கு கொண்டுவர மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இயக்குநர் பாக்யராஜின் உடல் 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் தகனம்

சென்னை

தமிழ்த் திரையுலகின் மகத்தான ஆளுமையாக போற்றப்படும் மறைந்த இயக்குநர் கே.பாக்யராஜின் உடல், சென்னை பெசன்ட் நகரில் உள்ள மின் மயானத்தில் இன்று (ஜூன் 28) தகனம் செய்யப்பட்டது.

பிரபல இயக்குநரும் நடிகருமான கே.பாக்யராஜ், மாரடைப்பால் சென்னையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 73. அவரது உடலுக்கு முதல்வர் விஜய், திமுக தலைவர் ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள், ரஜினிகாந்த், கமல்ஹாசன் உள்ளிட்ட திரையுலகினர் அஞ்சலி செலுத்தினர்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள வீட்டிலிருந்து இன்று காலையில் பாக்யராஜின் இறுதி ஊர்வலம் தொடங்கியது. வழிநெடுகிலும் பொதுமக்கள் பாக்யராஜின் உடலுக்கு மலர்களை தூவி இறுதி அஞ்சலி செலுத்தினர். இறுதி ஊர்வல வாகனத்தில் மனைவி பூர்ணிமா, மகன் சாந்தனு ஆகியோர் இருந்தனர்.

பெசன்ட் நகர் மின் மயானத்தில் 72 குண்டுகள் முழங்க அரசு மரியாதையுடன் பாக்யராஜ் உடலுக்கு இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. அவரின் இறுதி சடங்கில் தமிழக அமைச்சர்கள் ஆனந்த்,

ராஜ்மோகன் ஆகியோர் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். பாக்யராஜின் உடலுக்கு அவரது மகன் சாந்தனு இறுதி சடங்குகளை செய்தார். அதன் பின்னர் பெசன்ட் நகர் மின் மயானத்தில் பாக்யராஜின் உடல் தகனம் செய்யப்பட்டது.

தலைவர்கள், பிரபலங்கள் அஞ்சலி: பிரபல இயக்குநரும், நடிகருமான பாக்யராஜ் நேற்று (ஜூன் 27) காலை நடைபயிற்சி மேற்கொண்ட பிறகு வீட்டுக்கு வந்தார். அப்போது அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது. உடனடியாக சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி, அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து, பாக்யராஜ் உடல் மருத்துவமனையில் இருந்து நுங்கம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டுக்கு கொண்டு வரப்பட்டது. அங்கு அவரது உடலுக்கு முதல்வர் விஜய், மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் பாக்யராஜின் மனைவி பூர்ணிமா, மகன் சாந்தனு, மகள் சரண்யாவுக்கு ஆறுதல் கூறினார்.

திமுக தலைவர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, திமுக எம்.பி.க்கள் கனிமொழி, டி.ஆர்.பாலு, ஆ.ராசா ஆகியோரும் பாக்யராஜ் உடலுக்கு அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் ராஜ்மோகன், வன்னியரசு, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், விசிக தலைவர் திருமாவளவன், புதிய நீதிக் கட்சி தலைவர் ஏ.சி.சண்முகம், காங்கிரஸ் முன்னாள் தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், மநீம தலைவர் கமல்ஹாசன், நடிகர் ரஜினிகாந்த், பிரபு, விக்ரம் பிரபு, ஜெயராம், சார்லி, ராதிகா, சினேகா, நயன்தாரா, சுஹாசினி, இயக்குநர்கள் மணிரத்னம், பார்த்திபன், ஆர்.சுந்தர்ராஜன், பி.வாசு, பாண்டியராஜன், சமுத்திரக்கனி, ஹெச்.வினோத், லோகேஷ் கனகராஜ், சுசீந்திரன், சந்தானபாரதி, இசை அமைப்பாளர் தேவா உள்ளிட்டோர் பாக்யராஜ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்தியன் ரயில்வே சார்பில் மூன்று நாள் நடைபெறும் பாக்சிங் போட்டியை துவக்கி வைத்த நிதி அமைச்சர்

சென்னை, ஜூன் 29

புதியதாக தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மாநிலத் தலைவர் எங்களுக்கு முழு ஆதரவாக உள்ளார் அவருக்கு எங்களுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்இந்தியன் ரயில்வே சார்பில் மூன்று நாள் நடைபெறும் பாக்சிங் போட்டியை துவக்கி வைத்த நிதி அமைச்சர்

சென்னை புது வண்ணாரப்பேட்டை காமராஜர் சாலையில் உள்ள ஆர்.கே.நகர் விளையாட்டு வளாகத்தில் இந்தியன் ரயில்வே சார்பில் மூன்று நாள் பாக்ஸிங் போட்டி நடைபெறுகிறது இதில் சிறப்பு விருந்தினராக ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினரும் நிதி திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டு துறை அமைச்சர் மரிய வில்சன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவ மாணவிகளை பங்கு பெற்ற பாக்ஸிங் போட்டியை துவக்கி வைத்தார் ஊக்குவித்தார் மேலும் மாணவர்களோடு சேர்ந்து விளையாடினார் கூடைப்பந்து, கேரம் போட்டி, டேபிள் டென்னிஸ் விளையாட்டுகளை அமைச்சர் விளையாடினார் இதனை தொடர்ந்து இங்கு உள்ள கழிவறைகளை பார்த்து ஊழியர்களிடம் கடிந்து கொண்டார் மாணவ மாணவிகள் விளையாட வரும்போது சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டி கேட்டுக்கொண்டார் மேலும் இங்கு பணம் வசூல் செய்வதாக தெரிவித்தார் ஆர்.கே.நகர் தொகுதியில் உள்ள மாணவ மாணவிகளுக்கு இலவசமாக விளையாட அனுமதிக்க வேண்டுமென்றும் என்றும் ஆர்.கே.நகர் தொகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியில் படிக்கும் 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகளை தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விளையாட்டு கற்றுக் கொடுத்து அவர்களுக்கு நல்ல பணியில் வேலையில் அமர்த்துவதற்கு வழிவகை செய்ய வேண்டும் மேலும் கஞ்சா இல்லாத பகுதியாக மாற்றுவதற்கு மாணவர்களை விளையாட்டில் ஆர்வம் செலுத்த குழு அமைக்கப்படும் என்றும் தெரிவித்தார் மேலும் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் மாநில தலைவர் மாணிக்கம் தாகூருக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்வில் பொது மேலாளர் ரயில்வே ராஜேஷ் முருகன் பணிமனை கோட்ட செயலாளர் செந்தில் வேல், மூர்த்தி ஏஜிஎஸ் ஆகியோர் கலந்து கொண்டனர் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை இந்தியன் ரயில்வே ஊழியர்கள் பாக்சர் டீம் செய்திருந்தனர்.

திருவாரூர் மாவட்டம், திருவாரூர் இயற்கை எரிவாயு நவீன அரிசி ஆலையினை மாண்புமிகு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.பி.வெங்கட்ரமணன் அவர்கள் நேரில் பாரவையிட்டு ஆய்வு செய்தார். நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.வை.செல்வராஜ், மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.காமராஜ் அவர்கள் உடனிருந்தனர்.

தமிழக அரசின் டெல்லி பிரதிநிதி நியமன விவகாரம்: அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம்

சென்னை, ஜூன் 29

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:

போலியோ இல்லாத உலகத்தை உருவாக்குவோம்" என்ற குறிக்கோளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு சார்பாக மாநிலம் முழுவதும் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கும் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ராஜமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அயனாவரம் மகப்பேறு மருத்துவமனையில் இன்று நடைபெற்ற சிறப்பு போலியோ சொட்டு மருந்து முகாமில் பங்கேற்றேன். பிறந்த குழந்தைகள் தொடங்கி ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இதன்மூலம் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது. இதுவரை தங்கள் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து பெறாத பெற்றோர்கள், உங்கள் அருகில் உள்ள முகாமுக்கு சென்று தங்கள் குழந்தைகளுக்கான சொட்டு மருந்தினை கொடுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நந்தா கல்வி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா

ஈரோடு, ஜூன் 27

நந்தாகல்வி நிறுவனங்களின் கீழ் இயங்கி வரும் இந்திய மருத்துவக் கல்லூரிகளில் ஒன்றான நந்தா சித்த மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதலாவது பட்டமளிப்பு விழா நடைப்பெற்றது. இவ்விழாவில் தேசிய ஆணையத்தின் யுனானி, சித்தா மற்றும் சோவா ரிக்பா பிரிவின் முன்னாள் தலைவர்

மருத்துவர் கே. ஜெகநாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். தரவரிசையில் இடம் பெற்ற 3 மாணவர்கள் உட்பட 50 மாணவ மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி பேருரையாற்றினார். தலைவர் வி.சண்முகன் தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் மருத்துவர் இவ்விழாவிற்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் எம்.மேனகா வரவேற்றார். நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி. முதன்மை நிதி அலுவலர் ஏ. சிவப்பிரகாசம் மற்றும் கல்லூரியின் நிர்வாக அலுவலர் முனைவர் ஜீ.தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.